மக்கள் குரல்'ரல்
நடுநிலை நாளேடு



# "ஆன்மிகத்துடன் இணையும் அறிவு ஞானமாக மாறும்": மகாராஷ்டிரா கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் கருத்து

**கோவை, ஜூன் 13–**

கோவை அம்ருதா விஸ்வ வித்யாபீட வளாகத்தில் "சத்கமயா 2025" எனும் மூன்று நாள் கலாச்சார முகாமினை மகாராஷ்டிரா கவர்னர் சி.பி. ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார். பாரத நாட்டின் பண்பாட்டின் அடிப்படையிலான இந்த மூன்று நாள் முகாமில், அம்ருதாவின் ஆசிரியர்கள் மற்றும் அகாடமிக் சமூகத்தினர் இந்தியாவின் தத்துவ, கலாச்சார மற்றும் ஆன்மிக மரபுகளுடன் ஆழமாக ஈடுபட்டிருந்தனர்.

தனது சிறப்புரையில், கவர்னர் நவீன அறிவியல், ஆட்சி மற்றும் நெறிமுறை வாழ்க்கைக்கு வழிகாட்டும் பாரதத்தின் பாரம்பரிய ஞானத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். "ஆன்மிகம் இல்லாத அறிவு அகங்காரமாக மாறும்; பக்தியுடன் இணைந்தால், அது ஞானமாக மாறும்," என்று கூறிய அவர், அறிவியல் மற்றும் அக வளர்ச்சியை இணைப்பதில் அம்மாவின் உபதேசங்களின் பங்களிப்பை குறிப்பிட்டார்.

மேலும், பூஜ்யத்தின் கருத்து, நெறிமுறை கட்டமைப்புகள் மற்றும் மேம்பட்ட உலோகவியல் நடைமுறைகள் உள்ளிட்ட இந்தியாவின் வரலாற்று சிறப்புமிக்க பங்களிப்புகளை அவர் எடுத்துக்காட்டினார். கலாச்சார மதிப்புகள் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்றத்தின் அடித்தளமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

ஜூன் 14 வரை நடைபெறும் சத்கமயா நிகழ்ச்சியில் ஆய்வுக்கட்டுரை விளக்கங்கள், சிறப்புரைகள் மற்றும் கலாச்சார அமர்வுகள் ஆகியவை அடங்கும். "கற்பித்தலின் நோக்கம், இதயத்தின் அழைப்பு," "அறிவியல் மற்றும் ஆன்மீகம் குறித்த அம்மாவின் கண்ணோட்டம்," மற்றும் "இந்திய பொருளாதாரத்தின் அடிப்படையாக கலாச்சாரம்," போன்ற தலைப்புகளில் உணர்வூட்டும் அமர்வுகள் இடம்பெற உள்ளன.